**செய்தி வெளியீடு எண் : 2285** **நாள் : 17.12.2022**

**செய்தி வெளியீடு**

சென்னையை அடுத்த திருமழிசை குத்தம்பாக்கத்தில், 336 கோடி ரூபாய் திட்ட மதிப்பில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலையத்தை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், மாண்புமிகு பால்வளத்தறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசு முதன்மைச் செயலாளர் செல்வி.அபூர்வா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும உறுப்பினர் செயலாளர் திரு.அன்சுல்மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும தலைமை செயல் அலுவலர் திருமதி.எம்.லட்சமி இ.ஆ.ப., அவர்கள், இன்று (17.12.2022) பார்வையிட்டனர். இதில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.கிருஷ்ணசாமி அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேற்கு மாவட்டங்கள், கேரளா, கர்நாடகா மாநிலங்களில் இருந்து வரும் பேருந்துகளுக்காக, இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

பயணியர் பயன்படுத்தும் வகையில் 'லிப்ட்'டுகள், நகரும் படிக்கட்டுகள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கண்காணிப்பு அறை ஆகியன அமைக்கப்படவுள்ளது.

குத்தம்பாக்கம் நிலையத்தில், 70 புறநகர் பேருந்துகள், 30 ஆம்னி பேருந்துகள், 36 மாநகர பேருந்துகள் நிறுத்தும் வகையில் திட்ட வரைபடம் அமைத்து, அதன்படி கட்டுமானப் பணிகள் நடந்து வருகின்றன. மேலும் பேருந்து நிலையத்தின் கீழ்தளத்தில் 1,680 இருசக்கர வாகனங்கள், 235 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்தும் வகையில், 'பார்க்கிங்' வசதியும் வடிவமைக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன. பயணியர் பயன்படுத்தும் வகையில், 'லிப்ட்'டுகள், மற்றும் இரண்டு சரக்கு 'லிப்ட்'டுகள், ஐந்து நகரும் படிக்கட்டுகள், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் கண்காணிப்பு அறை இயங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணியை வரும் 2023 மே மாதத்திற்குள் முடிக்க அதிகாரிகளை மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் அறிவுறுத்தினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in